

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக முப்பெரும் விழாவில் சிறந்த பகுதிச் செயலாளர் விருது பெற்ற ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை அவர்களுக்கு, சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாருமான தயாநிதி மாறன் எம்.பி., மற்றும் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்றனர். உடன் தலைமை கழகச் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, எஸ்.ஆஸ்டின், எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், சென்னை மேற்கு மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆர்.என்.துரை, திருமதி.ஆ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி, வி.எஸ்.கலை, தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள் நுங்கை வி.எஸ்.ராஜ், எம்டிஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், ஐ.கென்னடி, டி.ஜோஸ்டேனியல், பா.ராபர்ட், திருமதி எம்.வெற்றிச்செல்வி மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட பூண்டி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

கழக மறுசீரமைப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம்!

திருவள்ளூர் நவ 04; திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பூண்டி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக மறுசீரமைப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (04.11.2026) புதன்கிழமை மாலை 4 மணியளவில் நெய்வேலி கூட்டுச்சாலை, கன்னிமா பேட்டை அருகில் உள்ள ஜோதி மஹாலில் நடைபெறுகிறது. திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் அவர்களின் ஆலோசனைப்படி, பூண்டி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் டி. மோதிலால் ஏற்பாட்டில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, கழக மறுசீரமைப்பு, கட்சிப் பணிகளை வலுப்படுத்துதல் மற்றும் எதிர்காலக் கழகச் செயல்பாடுகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

எனவே, மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மாவட்ட மற்றும் ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில் கோவை மாவட்டத்தில்

பழுதான சாலைகளை சீரமைக்க நிதியின்றி தவிக்கும் நெடுஞ்சாலைத்துறை !

போக்குவரத்து நெரிசல் – மக்கள் அவதி!

கோவை, நவ.4- கோவை மாவட்டத்தில், மாநில நெடுஞ் சாலைத்துறை, திட்டப் பிரிவு, நபார்டு பிரிவு போன்றவற்றில் ஆண்டிற்கு 70க்கும் மேற்பட்ட திட்டப்பணிகள் நடத்தப்பட்டு வந்தது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பெரும்பாலான பிரிவுகள் இணைக்கப் பட்டது. கோட்டம் 1, 2 என பிரிக்கப்பட்டது. அலுவலக ரீதியான நடைமுறை மாறியமைக்கப் பட்டது. அதன் பின்னரும் நடப்பாண்டிற்குரிய திட்டப்பணிகள் சொற்ப அளவில் கூட துவங்கப் படவில்லை. மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் சாலை கட்டுமானங்கள் மேம்பாடு அடைய முடியாத நிலைமை இருக்கிறது.

மாவட்ட அளவில் வாகனங்களின் பெருக்கம், ரோடு பழுது பிரச்சினை அதிகமாக இருக்கிறது. இரு வழிப் பாதையை நான்கு வழிப் பாதையாக மாற்ற வேண்டும், நான்கு வழிப் பாதையை ஆறு வழிப் பாதையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. இது பரிசீலிக்கப்படவில்லை. மாவட்ட சாலை, கிராம பகுதி சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மருதமலை ரோடு விரிவாக்கம் தவிர, வேறு எந்த வேலைக்கும் மாநில நெடுஞ்சாலைத்துறை ஒப்புதல் தரவில்லை.

பீளமேடு, கோல்டுவின்ஸ், நீலாம்பூர் மேம்பாலம் விரிவாக்கம் குழப்ப நிலையில் கிடக்கிறது. கோவை மாநகராட்சி சார்பில் பாதாள சாக்கடை, குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டு நாசமான சாலைகளை சீரமைக்க 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த பணியும் துவக்கப் படவில்லை. இந்த நிலையில் மழை காரணமாக, பாதிப்பு மேலும் அதிக மாகிவிட்டது.

மாவட்ட அளவில் இதுவரை 17 நாட்கள் மழை பெய்துள்ளது. இதில், 200 கி.மீ முதல் 250 கி.மீ தூரம் வரை நெடுஞ்சாலைத்துறையின் சாலைகள் பள்ளமாகி தார் தளம் மோசமாகி விட்டது. சில இடங்களில் பாலங்களும் சேதமாகி விட்டது சாலை பணிகளுக்கு பல கோடி ரூபாய் நிதி எதிர் பார்த்து நெடுஞ்சாலைத் துறையினர் காத்திருக்கின்றனர். ஆனால், நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

கோவை மாநகரம், தொழில் நகர அந்தஸ்தில் இருந்த போதிலும், சாலைகள் கட்டமைப்பில் முக்கியத்துவம் தரப்படவில்லை. சாலைகள் சிதைந்து வருவதால், தொழில்துறையினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். உற்பத்தி செய்த பொருட்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல முடியாத நிலை இருக்கிறது.

நெடுஞ்சாலை ஆணையகத்தின் மதுக்கரை நிலாம்பூர் பைபாஸ் சாலை விரிவாக்க பணியும் துவங்கப்படவில்லை. இது திட்ட அறிக்கையுடன் முடங்கி கிடக்கிறது. தினமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் தர மற்ற நெரிசல் மிக்க சாலைகளால் விபத்துக்கள் அதிகமாகி வருகிறது. தொழில் நகரம் விபத்து நகரமாக மாறிவிட்டது. சாலை பராமரிப்பு பணி, சீரமைப்பு நடத்த முடியாமல் நெடுஞ்சாலைத் துறை தள்ளாடி வருகிறது. சாலை கட்டமைப்பை மேம்படுத்த போதிய நிதி ஒதுக்கினால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்கிறார்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி சென்னை விமான நிலைய தொ.மு.ச ஆட்டோ நிறுத்தும் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் (ஆயுத பூஜை) காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பல்லாவரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டு தொ.மு.ச கழக கொடியினை ஏற்றி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை மற்றும் பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பித்தார்கள் தொ.மு.ச ஆட்டோ ஓட்டுநர்கள் சங்க நிர்வாகிகள் சக ஆட்டோ டிரைவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

நேபாளத்தில் ஹெலிகாப்டர் விபத்து!



காத்மாண்டு நவ.4- நேபாளத்தின் எவரெஸ்ட் சிகரப் பகுதியில் இரு ஹெலிகாப்டர்கள் தரையிறங்க முயன்றபோது, அவற்றின் இறக்கைகள் காற்றில் ஒன்றுடன் ஒன்று மோதி பயங்கர விபத்துக் குள்ளானதில், இந்தியச் சுற்றுலாப் பயணி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் இருந்து சுமார் 250 கி.மீ தொலைவில் உள்ள சோலுகும்பே மாவட்டத்தின் பெரிச்சே என்ற இடத்தில் உள்ள ஹெலிபேடில், இன்று காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

'ஃபிஷ்டெயில் ஏர்' மற்றும் 'ஏர் டைனாஸ்டி' ஆகிய இரு தனியார் நிறுவனங்களின் ஹெலிகாப்டர்கள் பெரிச்சே ஹெலிபேடில் ஒரே நேரத்தில் தரையிறங்க முயன்றுள்ளன.

அப்போது, எதிர்பாராத விதமாக இரு ஹெலிகாப்டர்களின் சுழல் இறக்கைகளும் ஒன்றுடன் ஒன்று பலமாக மோதிக்கொண்டன.

இந்த அதிர்ச்சியூட்டும் காட்சிகள் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி, தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

75 'அ' வட்டக் கழக செயலாளர் பா.பி.தாஸ் இல்ல விழா!

மேயர் பிரியா – கலாநிதி வீராசாமி எம்.பி. – தாயகம் கவி பங்கேற்பு!

சென்னை, நவ.4- கழகத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்லாசியுடன் 75 'அ' வட்டக் கழகச் செயலாளர் பா.பி.தாஸ் - டி.ஜாய்ஸ் புதல்வி செல்வி டி.எமிரஞ்சலின் பூப்புனித நீராட்டு விழா நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மேனாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையேற்று வாழ்த்துகிறார்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட 75 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.பி.தாஸ் - டி.ஜாய்ஸ் ஆகியோரின் அன்புப் புதல்வி செல்வி டி.எமிரஞ்சலின் அவர்களின் பூப்புனித நீராட்டுவிழா, இன்று (04.11.2026 - புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு மேல், சென்னை-12, ஓட்டேரி, பிரிக்ளின் ரோட்டில் அமைந்துள்ள எஸ்.ஆர்.மேலனில் சிறப்பாக நடைபெறுகிறது.

இவ்விழாவில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மேனாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையேற்று செல்வியை வாழ்த்திச் சிறப்பிக்கிறார்.

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் எம்.சாமிகண்ணு, பகுதித் துணைச் செயலாளர் பி.சுகுமார், மாவட்டப் பிரதிநிதிகள் வெல்டிங் ச.பாபு, இரா.புருஷோத்தமன், சோமு அறிவழகன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கேபிள் டிவி .சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

76வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.சசிகுமார், 75வது வட்டக் கழகச் செயலாளர் வி.க.வெங்கடேசன், 76 (அ) வட்டக் கழகச் செயலாளர் எஸ்.வெங்கடேசன், 73வது வட்டக் கழகச் செயலாளர் எம்.தமிம், 73 (அ) வட்டக் கழகச் செயலாளர் கே.சுரேஷ்குமார் (எ) பொல்லுசுரேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழகத் துணை அமைப்புச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ப.தாயகம்கவி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.இரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி 8வது மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி லோகேஷ், தமிழ்ச்செல்வி சசிகுமார், மு.சரவணன் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

கழக மாநில நிர்வாகிகள் தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், பா.ஸ்ரீராமலு, நேதாஜி கணேசன், சென்னை கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கோ.ஏகப்பன், மாவட்ட நிர்வாகிகள் ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராஜன் இசட். ஆசாத் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.டி.ஆர்.நாகராஜ், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, சொ.வேலு, வி.சுதாகர், ஆகியோரும், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.உதயசங்கர், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

மாவட்ட அமைப்பாளர்கள் நா.துலுக்கானம், இரா.வீரமணி, எம்.ஃபெரோஸ் கான் கா.ராஜ் முகமது, ஜி.தாமோதரன், எல்.பி.எப்.மோகன், நா.ரஞ்சித்விஜயாலயன், சுதாகர், எம்.ஜெயராமன், ஜெ.ஜெயசீலன், ஜெ.தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் பி.விஜயகுமார், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், க.வினோத், ஜெ.பாலமுருகன் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

திரு.வி.க.நகர் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் அ.கோ.விந்தன், த.கருணாநிதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி, தில்லைகதிரவன், பெரம்பூர் ஆர்.ராஜன், புல்லட் ரமேஷ், பி. புவனவதி கினார் .ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

வட்டக் கழகச் செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார், எஸ்.புஷ்பராஜ், எம்.இசட். அபாய், எம்.ஏ.டீக்கா, பரிமளா சுரேஷ்பாபு ஆகியோரும், மாவட்டப் பிரதிநிதிகள் எல்.சுப்பிரமணி, அ.விஜயகுமார், வே.து.தாமரைச்செல்வன், நெல்லை மா முத்தையா, பா பாபு மனோகரன்,கி.நாகலிங்கம், அ.கதிரவன், எச்.திவாகர், ஆர்.பிரகாஷ், வி.ஜெகன், ஸ்வீட் பாபு, டி.சீனிவாசன், மதுரை பிரகாஷ் எம்.துரைசாமி, ஜெ.அண்ணாதுரை, க.எழிலன், டி.ராஜ், , , ஆர்.ராஜராஜன், வ.நாமதேவன், எம்.விஜயகுமார் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர்.

எல்.பாண்டுரங்கன், கனல் கங்கா கே.கோகுல், எம் எஸ் மைனர் பாபு ஏஜி எஸ் கோல்ட்ஜி கோ.கருணாகரன், இரா. தனசேகரன், புல்லட் என்.பாஸ்கர், எஸ்.சதீஷ்குமார், அ.மகேஷ், சாவித்திரி அன்பழகன், கோ.ராமமூர்த்தி, எஸ்.ஜெயகுமார், எம்.சண்முகவேல், ஹரிபிரசாத், நா.தமிழ்மணி, ஆர்.சீனிவாசன், சுரேஷ்கோபி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

சி. வில்கின்ஸ், டி மதிவாணன் எம்தேவி எம் விஜயகுமார் பா. உதயச்சந்திரன் எம் மாசிலாமணி ஏ.சுதாகர், எம்.மாணிக்கம் எஸ். மணிகண்டன் உள்ளிட்டோர் விழா ஏற்பாடுகளில் பங்கேற்கின்றனர்.

மேலும், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மாணவர் அணியினர், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள், தொண்டர்கள், பொதுமக்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு செல்வி டி.எமிரஞ்சலின் அவர்களை வாழ்த்த உள்ளனர்.

விழாவின் நிறைவில் முன்னாள் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆ.அஜித், 75 (அ) வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.சந்தாமூர்த்தி ஆகியோர் நன்றியுரை வழங்குகின்றனர்.



பெரம்பூர் தெற்குப் பகுதி, 44– வது வட்டச் செயலாளரும், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளருமான பெரம்பூர் த.ஆறுமுகம் மகள் ஆ.தமிழ்பொன்னி – கு.விக்னேஷ் ஆகியோர் திருமணம் அண்மையில் நடைபெற்றதை யொட்டி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, இல்லத்திற்கு நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வேதாரண்யம் செ.யூசுப்

நவம்பர் 4 (2013)



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.